இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.
மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 11.11.2026

மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ -23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ -14°செ ஆகவும் பதிவானது.

1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய சில இடங்களில் இலேசான மழையும், மற்ற பகுதிகளில் இலேசான தூரல் மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30-32°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 08-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வரும் வாரத்தில் தூறல் மழை (அ) மழையில்லா நாட்கள் எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 4 கி.மீ வரை வீசக்கூடும்.
- கடந்தவார மழையினால் கிடைத்த மண் ஈரத்திற்கேற்ப நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.
- அதிகப்படியான மழை மற்றும் நீர் தேக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து பயிர்களை காக்க ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்தினை இடவும்.
- வெப்பநிலை குறைந்து காற்றில் அதிக ஈரப்பதமும் காணப்படுவதால் நெல்லில் குலைநோய் வர வாய்ப்புள்ளது. ஆதலால் முன்னெச்சரிக்கையாக முதல் தடவையாக ஒரு எக்டருக்கு டிரைசைக்ளோசோல் 500 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- நிலவும் வெப்பநிலையில் நெல்லில் இலைமடக்குப்புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு எக்டருக்கு குளோரிபைரிபாஸ் 1250 மில்லி அல்லது தயோமீத்தக்ஸம் 100 கிராம் தெளிக்கவும். பூச்சியை கட்டுப்படுத்த இரண்டு முறை மேற்சென்ன மருந்தை ஒன்றன் பின் ஒன்றாக மாத்தி தெளிக்கவும்.
- கொண்டைக்கடலை மற்றும் கொத்தமல்லி விதைப்பதற்கு நிலம் தயார் செய்யவும். நவம்பர் 15-க்குப் பிறகு விதைப்பு செய்யவும்.
- மத்திய பருவ கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டுவதனால் காற்றின் காரணமாக கரும்பு சாய்வதனைத் தடுக்கலாம்.
- மஞ்சளில் தண்ணீரை வடித்த பிறகு டிரைக்கோடெர்மா என்ற உயிர் பூஞ்சாணக் கொல்லியை ஒரு எக்கடருக்கு 10 கிலோ என்ற அளவில் 250 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மண்புழு உரத்துடன் கலந்து மண்ணில் சீராகத் தூவதன் மூலம் இப்பாக்டீரியாக்களின் எண்ணிக்கையை மண்ணில் அதிகரிக்கலாம்.
- மேலும், மஞ்சளில் கிழங்கு அழுகல் நோய் அறிகுறி தென்பட்டால் 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை செடிகளின் வேரில் ஊற்றவும். மேலும் போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.

- திராட்சையில் தொடர்ந்து காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதுடன் தூறல் மழையும் இருப்பதால் அடிச்சாம்பல் நோய் வர வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் 1 சத போர்டோகலவையை தெளித்து கட்டுப்படுத்தவும்.
- கால்நடைகளுக்கு நனைந்த தீவனங்கள் கொடுப்பதை தவிர்ப்பதன் மூலம் வயிற்றுப்போக்கு ஏற்படுவதை தவிர்க்கலாம். மேலும் கால்நடை கூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும்.
- கால்நடை கூடாரங்களில் போதிய காற்றோட்டத்தினை ஏற்படுத்தி அதிக காற்றின் ஈரப்பதத்தினால் வரும் நோய்களைத் தடுக்கவும்.
- கால்நடைகளை புதியதாக முளைத்த புற்களை மேயவிடாமல் தடுப்பதனால் வயிற்றுபுழுக்களினால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்கலாம்.

2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் 11.11.2026 முதல் 15.11.2026 வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28 - 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22- 26°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 08-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

- வயலில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.
- வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிற்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்
- லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளை மேட்டுபாங்கான பகுதியில் மழை சாரல் படாமல் பாதுகாக்கவும்.

3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாகவும் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 25-36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வடக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அறிவுரை

- 11.11.2026 முதல் 15.11.2026 வரை லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர் வயல்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. வயலில் தேங்கும் அதிகப்படியான மழைநீரை வடித்து வெளியேற்றவும்.
- நெல்லில் தண்டுத் துளைப்பானைக் கட்டுப்படுத்த, எக்டருக்கு அசிபேட் 75% SP 670–1000 கிராம் அல்லது அசிபேட் 95% SG 590 கிராம் அல்லது அசாடிராக்டின் 0.03% 1000 மி.லி. என்ற அளவில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.
- நெல்லில் இலைச் சுருட்டுப்புழுவைக் கட்டுப்படுத்த, எக்டருக்கு அசிபேட் 75% SP 666–1000 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% 1000 மி.லி. அல்லது குளோர்பைரிபாஸ் 20% EC 1250 மி.லி. என்ற அளவில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.
- கரும்பில் செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட தூர்களை ஆரம்ப நிலையிலேயே அகற்றி, கார்பென்டாசிம் 50 WP மருந்தின் 0.1% கரைசலை வேர் பகுதியில் ஊற்றவும்.
- கரும்பு இடைக்கணுப் புழுவைக் கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா கைலோனிஸ் (Trichogramma chilonis) முட்டை ஒட்டுண்ணியை ஒரு ஹெக்டேருக்கு ஒவ்வொரு முறையும் 2.5 சி.சி. வீதம் விடவும். நான்காவது மாதம் தொடங்கி 15 நாள் இடைவெளியில் 6 முறை விடவும்.
- நிலக்கடலையில் நில ஈரத்தைப் பொறுத்து விதைத்த 40–70ஆம் நாட்களில் செடியின் அருகே எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் இடவும். பின்னர் கொத்தி மண்ணுடன் கலந்து அணைக்கவும்.
- நிலக்கடலையில் துரு நோயைக் கட்டுப்படுத்த, மான்கோசெப் 1000 கிராம்/எக்டர் அல்லது குளோரோதலோனில் 1000 கிராம்/எக்டர் அல்லது நனையும் கந்தகம் 2500 கிராம்/எக்டர் தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.
- நிலக்கடலையில் ஆரம்ப இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, கார்பென்டாசிம் 500 கிராம்/எக்டர் அல்லது மான்கோசெப் 1000 கிராம்/எக்டர் அல்லது குளோரோதலோனில் 1000 கிராம்/எக்டர் தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.
- மக்காச்சோளப் படைப்புழுவைக் கட்டுப்படுத்த, அசாடிராக்டின் 1% EC 20 மி.லி./10 லிட்டர் நீர் அல்லது தையோடிகார்ப் 75 WP 20 கிராம்/10 லிட்டர் நீர் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 SG 4 கிராம்/10 லிட்டர் நீர் என்ற அளவில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.
- சோளத்தில் தண்டுத் துளைப்பானைக் கட்டுப்படுத்த, கார்போஃபியூரான் 3 CG 17 கிலோ/எக்டர் அளவை மணலுடன் கலந்து மொத்தம் 50 கிலோவாக்கி, இலைச் சுழிகளில் இடவும்.
- உளுந்தில் களைகளைக் கட்டுப்படுத்த விதைத்த 20ஆம் நாளில் ஒருமுறை கைக்களை எடுக்கவும். அல்லது விதைத்த 15–20ஆம் நாளில், முளைப்புக்குப் பிந்தைய ஆரம்ப நிலையில் குயிசலோஃபாப் எத்தில் 50 கிராம் செயற்பொருள்/எக்டர் மற்றும் இமாசெதாபிர் 50 கிராம் செயற்பொருள்/எக்டர் பயன்படுத்தவும்.
- உளுந்து மற்றும் பாசிப்பயரில் பூக்கள் உதிர்வதைக் குறைக்க, பூக்கும் பருவத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பயறு ஒண்டர் 5 கிலோ/எக்டர் அளவில் ஒருமுறை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்கவும். சாம்பல் நோய் அறிகுறிகள் தோன்றியதும் 5% வேப்பங்கொட்டைப் பருப்புச் சாறு அல்லது 3% வேப்பெண்ணெயை 10

நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். அல்லது கார்பென்டாசிம் 500 கிராம்/எக்டர், நனையும் கந்தகம் 1500 கிராம்/எக்டர் அல்லது புரோபிகோனசோல் 500 மி.லி./எக்டர் அளவில் நோய் தொடங்கியதும், 10 நாட்களுக்குப் பிறகும் தெளிக்கவும்.

- உளுந்து மற்றும் பாசிப்பயரில் துரு நோயைக் கட்டுப்படுத்த, மான்கோசெப் 1000 கிராம்/எக்டர் அல்லது நனையும் கந்தகம் 1500 கிராம்/எக்டர் அளவில் நோய் தொடங்கியதும், 10 நாட்களுக்குப் பிறகும் தெளிக்கவும்.
- பருத்தியில் தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்த, இமிடாகுளோபிரிட் 200 SL 100 மி.லி./எக்டர் அல்லது அசிடாமிபிரிட் 20% SP 50 கிராம்/எக்டர் அல்லது அசாடிராக்டின் 0.03% WSP 2500–5000 கிராம்/எக்டர் அல்லது புப்ரோஃபெசின் 25% SC 1000 மி.லி./எக்டர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.

தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தின் ஒருசில இடங்களில் நவம்பர் 11, 12 மற்றும் 15 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 25-36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

நெல்

நெற்பயிரில் ஆனைக்கொம்பன் தாக்குதலால் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் நெற்பயிரின் நடு குருத்து வெங்காய இலை குழல் போல் நீண்டு காணப்படும். இதனை கட்டுப்படுத்த 1 ஏக்கருக்கு 400 கிராம் பிப்ரொனில் அல்லது 50 கிராம் தையோமெத்தாக்ஸம் என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தண்ணீரில் கலந்து தெளிக்கவும். ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் விளக்குபொறி மற்றும் ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சிப் பொறிகளை வைப்பதன் மூலம் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்து கட்டுப்படுத்தலாம்.

வாழை

தற்போது வாழையில் நூற்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இந்த நூற்புழுக்கள் வாழையின் வேர்களிலும், கிழங்குகளிலும் சாற்றை உறிஞ்சுவதால் இதன் கிழங்குகள் கருமை நிறமாக காணப்படும்.

நூற்புழுக்கள் ஏற்படுத்தும் காயங்கள் வழியாக பாக்டீரியா மற்றும் பூசண நோய்க் கிருமிகள் எளிதில் நுழைந்து நோய்களை உண்டாக்க ஏதுவாகும். தாக்கப்பட்ட வாழைகள் வாடும். நடவுக்கு வாழைக் கன்றுகளை நூற்புழுக்கள் தாக்காத இடங்களிலிருந்து தேர்வு செய்ய வேண்டும்.

தாக்கிய இடங்களில் மீண்டும் வாழையைப் பயிரிடாமல் மாற்றுப் பயிர் செய்ய வேண்டும். 45 நாட்கள் கழித்து சணப்பு நடவு செய்து பின்னர் ஒரு மாதம் கழித்து அதனை மண்ணில் மடக்கி விட வேண்டும்.

வாழை நடவு செய்ய நிலத்தை தயார் செய்வதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 50 கிலோ வேப்பம்பிண்ணாக்கு இட வேண்டும். மேலும் நன்கு மக்கிய தொழு உரத்துடன் ஒரு கிலோ சூடோமோனாஸ் ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி கலந்து மண்ணில் இட வேண்டும்.

வாழை கட்டை நடுவதற்கு முன்பு 10 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் இமிடாகுளோபிரிடு மருந்தினை கலந்து அதில் வாழைக் கட்டையின் தூர் பகுதியை நன்கு நனைத்து பிறகு நடவு செய்ய வேண்டும்.

வாழை நடவு செய்து 30 வது நாள் ஒரு கட்டைக்கு 30 கிராம் என்ற அளவில் பச்சைக் குருனையை இடவேண்டும்.

பருத்தி

தற்பொழுது நிலவிவரும் பருவசூழ்நிலையில் பருத்தியில் அசுவினி தாக்குதல் பரவலாக தென்படுகிறது. நோயின் அறிகுறிகளாக, பூச்சிகள் இலை மற்றும் குருத்துக்களின் சாறை உறிஞ்சுவதால் தாக்கப்பட்ட பயிர்களில் இலைகள் மற்றும் தண்டுகள் வளர்ச்சிக் குன்றி காணப்படும். மேலும் பூச்சிகள் தேன் போன்ற கழிவுத் திரவத்தை இலைகளின் மேற்புறத்தில் சுரக்க செய்கின்றது. தாக்கப்பட்ட இலைகள் கருமையாக மாறி காய்ந்து விடுகிறது. இதனை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு 50 மி.லி என்ற அளவில் இமிடாகுளோபிரிட் 17.8% மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

தென்னை

அடுத்த சில நாட்களுக்கு அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னையில் காய்ந்த மற்றும் முதிர்ந்த காய்களை பறித்துவிடவும் பழைய காய்ந்த மட்டைகளை அகற்றி விடவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும்.

நிலக்கடலை

ஐப்பசி பட்டம் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து கொடுக்கவும். ஆதாவது, அடியுரமாக 50%, விதைத்த 20-ம் நாளில் 25% மற்றும் விதைத்த 45-ம் நாளில் 25% மும் அளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை பயிர் செய்யும் விவசாயிகள் நிலக்கடலையில் தண்டழுகல் நோய் வராமல் தடுக்க விதையுடன் டிரைகோடெர்மா விரிடி 10கிராம்/கிலோ மற்றும் சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.

அவரை

தற்போது அவரைக் கொடி வகை பயிரில் கவாத்து செய்தல் நல்ல பயனளிக்கும். அவரைக் கொடி பந்தலை அடைந்த பின், நுனியைக் கிள்ளி விட வேண்டும். ஒவ்வொரு கிளையையும் 3 அடி நீளத்துக்கு விட்டு கவாத்து செய்ய வேண்டும். பூக்கும் காலம் தொடர்ந்த பின், கிளைகளின் நுனியினை மூன்று கணுக்களை விட்டு கவாத்து செய்ய வேண்டும். பயிரின் இனப்பெருக்க பருவம் முழுவதும் இதனை தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

கத்திரி

நிலவும் பருவச்சூழ்நிலையில் கத்திரி பயிரில் புள்ளிவண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை வண்டுகள் இலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகள் சல்லடை போல் காணப்படும். செடிகளில் வீரியம் குன்றி, நாளடைவில் காய்ந்து கருகி உதிர்ந்து விடும். இலைகளில் உள்ள வண்டினப் புழுக்களையும், முட்டை கூடுகளையும் சேகரித்து அழிக்கவும். மேலும் 1 டாங்கிற்கு 35 கிராம் என்ற விகிதத்தில் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

சம்பங்கி

சம்பங்கி பயிரில் அசுவினி பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. அசுவினி பூச்சிகள் மற்றும் அவற்றின் குஞ்சுகள் பூக்கள், மொட்டுகள், மற்றும் இலைகளை கடித்து உண்டு சேதத்தை உருவாக்கும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புப்ரோபெசின் 25 சதம் என்ற மருந்துடன் 10 மில்லி ஒட்டும்பசை சேர்த்து கலந்து தெளிக்கவும்.

செண்டு மல்லி:

செண்டு மல்லி பூ பயிரில் சிவப்பு சிலந்தி பூச்சிகள் பரவலாக தென்படலாம். இப்பூச்சிகள் செடிகளின் இலைகள் மற்றும் பூக்களிலிருந்து சாற்றிணை உறிஞ்சும். சேதம் அதிகமாகும் போது பூக்கள் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த புராபர்கைட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1½ மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

- பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

கால்நடை

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலை மற்றும் இரவு நேரத்தில் வீசும் குளிர்ந்த காற்று காரணமாக கால்நடைகளை குறிப்பாக இளம் கன்றுகள் அல்லது குட்டிகளை திறந்த வெளியில் கட்டக் கூடாது. தகுந்த கொட்டகைகளில் அடைக்க வேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (*மின் விளக்குகள்*) பொருத்துவதன் மூலம் நுரையீரல் அழற்சி போன்ற பாதிப்பில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.

4. மலைப்பிரதேச மண்டலம்

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வரும் நாட்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். முதல் மூன்றாம் மற்றும் ஐந்து நாட்களில் மிக இலேசானது முதல் இலேசான மழை பெய்யக் கூடும். இரண்டாம் மற்றும் நான்காம் நாட்களில் மழை பெய்ய வாய்ப்பில்லை. அதிகபட்ச வெப்பநிலை 16-18°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-10°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60-70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அறிவுரை

- கேரட் பயிரில் துரு ஈ மேலாண்மை விதைத்த 45 - 50 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ குளோரான்ட்ரானிலிப்ரோல் என்ற குருணை மருந்துகளை, மழை இல்லாத நேரங்களில் மண்ணில் இட வேண்டும்.
- பூண்டு பயிரில் ஃபுசேரியம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, கார்பென்டசிம் @ 1கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லிஎன்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் மண்ணில் ஊற்ற வேண்டும்.
- உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, • நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி, மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள் • பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும் • ஹெக்ஸகோனசோல்@ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம்/ எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது) • காப்பர் ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம் + புரோபிகோனசோல்@ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், குறிப்பாக ஜூன்- செப்டம்பர் மற்றும் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தெளிக்கவும் • எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய்

எதிர்ப்பு ரகங்களை பயிரிடவும் மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் • பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும. • ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) • ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது) • கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) • ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

- இஞ்சி மென்அழுகல் மேலாண்மை • போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம் • நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/ லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். • நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை@ 1%என்றஅளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

5. வட மேற்கு மண்டலம்

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் பகுதியளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தில் முதல் நான்கு நாட்கள் மழையற்றும் மற்றும் ஒரு சில இடங்களில் **15.11.2026** அன்று இலேசான மழைக்கும் வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை **32-33**°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **21-22**°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் **90** சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் **50** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **06-10** கி.மீ வேகத்தில் பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

வேளாண் அறிவுரை

- *அடுத்த ஐந்து நாட்களுக்கு பலத்த காற்றோ அல்லது கனமழையோ இல்லாததால் பயிர்களுக்கு உரம் வைப்பதற்கும், பூச்சிக்கொல்லி போன்ற திரவங்கள் தெளிப்பதற்கும் உகந்ததாக உள்ளது. மேலும் பருத்தி மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களுக்கு களை மேலாண்மை மற்றும் மண் அணைக்கும் பணிகளையும் மேற்கொள்ளலாம். குறிப்பாக கொல்லிமலை மற்றும் அதனைச். சுற்றியுள்ள பகுதிகளில் கேழ்வரகு, தினை மற்றும் சாமை போன்ற சிறுதானியங்களை அதிகளவில் பயிரிட பரிந்துரைக்கப்படுகின்றன. மேலும் மண்வளத்தை மேம்படுத்தவும், கூடுதல் வருமானம் பெறவும் உளுந்து மற்றும் பாசிப்பயிறு போன்ற பயறு வகைகளை நிலக்கடலை அல்லது சோளத்துடன் ஊடுபயிராகவோ அல்லது நெல் அறுவடைக்கு பின் சுழற்சிப் பயிராகவோ பயிரிடலாம்.*
- *தென்னை விவசாயிகள் தற்போது பருவமழை பெய்து வருவதால், இந்த மழையைப் பயன்படுத்தி தென்னை மரத்திற்கு ஊட்டச்சத்து மேலாண்மை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அதாவது மரம் ஒன்றிற்கு **1.25** கிலோ யூரியா, **2** கிலோ சூப்பர் மற்றும் **2** கிலோ பொட்டாஷ் என்ற அளவில் வைக்க வேண்டும். மேலும் தென்னையில் குரும்பை கொட்டுதல் பாதிப்பு அதிகம் உள்ளதால் மரம் ஒன்றிற்கு **1** கிலோ என்ற அளவில் தென்னை நுண்ணூட்டக் கலவையை **10** கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து ஊட்டமேற்றி **1** மாத காலம் நிழலில் வைத்திருந்து, பின்பு அடியுரமாக மரத்தைச் சுற்றி **2** அடி தள்ளி வட்ட வடிவக் குழியில் இட வேண்டும்.*
- *தற்போது நிலவும் மாறுபட்ட காலநிலை காரணமாக, பயிரிட்டுள்ள ஆமணக்கு பயிரில் குழை அழுகல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதன் அறிகுறிகளானது பூ மற்றும் பூங்கொத்து அழுகி, சாம்பல் நிற பூஞ்சைப் படலத்தால் மூடப்பட்ட கட்டிகளாக மாறும், நோய் தாக்கிய காய்கள் பழுப்பு நிறமாகி அழுகி, முன்கூட்டியே உதிர்ந்து விடுகின்றன, தண்டு மற்றும் இலைகளில் நீர் தேங்கியது போன்ற ஒழுங்கற்ற புள்ளிகள் தோன்றிய சில நேரங்களில் இளம் கிளைகள் உடைந்து விடும். எனவே இதனை நிவர்த்தி செய்ய புரோப்பிகோனசோல்*

*என்ற இரசாயன பூஞ்சாணக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **1.5** மி.லி என்றளவில் கலந்து தெளிக்கலாம்.*

கால்நடை ஆலோசனைகள்

<u>பருவ மழைக்காலங்களில் கோழிகளுக்கு ஏற்பட்டுள்ள இரத்தக்கழிச்சல் நோய் பாதிப்பு</u>

- *தமிழ்நாட்டில் தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கி தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஆழ் கூளம் முறையில் வளர்க்கப்படும் கோழிகளில் இரத்தக்கழிச்சல் நோயானது அதிகளவில் பரவி வருகிறது.*
- *எனவே கோழி வளர்க்கும் விவசாயிகள், இந்த நோய் ஏற்படாமல் தடுக்க ஆழ் கூளத்தை சுத்தமாகவும், ஈரப்பதம் இல்லாமலும் இருக்க வேண்டும் மற்றும் சுத்தமான குடிநீர் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.*
- *மேலும் கோழிகளுக்கு சரிவிகித சமச்சீர் தீவனம், தாது உப்பு மற்றும் வைட்டமின் போன்றவற்றை முறையாக கொடுக்க வேண்டும்.*
- *இரத்தக்கழிச்சல் நோயானது நோய்வாய்ப்பட்ட ஒரு கோழியிலிருந்து மற்ற கோழிகளுக்கும் எளிதாக பரவக்கூடியது என்பதால் நோய்த்தொற்று ஏற்பட்ட கோழிகளை ஆரோக்கியமான கோழிகளிடமிருந்து பிரித்து வைக்க வேண்டும்.*
- *மேலும் இந்த நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொட்டகையை அவ்வப்போது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.*
- *மழைக்காலங்களில் சுண்ணாம்பு தூள் கொண்டு ஆழ் கூளத்தின் ஈரப்பதத்தைக் குறைப்பதன் மூலம் இந்த நோயை உண்டாக்கும் ஒட்டுண்ணியின் உறை முட்டைகளை செயலிழக்கச் செய்யலாம்.*

6. வடகிழக்கு மண்டலம்

*வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வரும் வாரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை **30**°செ முதல் **33**°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **23**°செ முதல் **25**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் **80-90** சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் **50-80** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் **06-14** கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று வடக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

வேளாண் அறிவுரைகள்

- *அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். நாற்றங்கால் வயலுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்றவற்றை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.*
- *தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம் மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும்.*
- *இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த **20** சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்க்ஷம் **8.0** கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் **400** மிலி **(10000** பி.பி.எம்**)** அல்லது தயாமீதாக்க்ஷம் **4.0** கிராம் வீதம் தெளிக்க வேண்டும்*

- *தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் **400** மிலி / ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு **600** கி/ ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.*
- *இளம் நாற்றங்காலில் இலைபேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்கத்தின் அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான் **40** எஸ்.எல் **50** மி.லி தெளிக்கலாம். நெல் பயிரில் இலையுறை கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயின் அறிகுறிகள் தென்படும் போது வேப்ப எண்ணெய் 3% என்ற அளவில் தெளிக்கலாம்.*
- *அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலை மற்றும் முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.*
- *நல்ல காற்றோட்ட வசதியை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் **5** மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும்.*
- *இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.*

கால்நடை ஆலோசனைகள்

- *கால்நடைகொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும. மேலும் வாரம் ஒரு முறை பிளிச்சிங்பௌடர் தூவிவிட வேண்டும். இது நோய்த் தொற்றை தடுக்க உதவும்.*
- *கால்நடை கொட்டகைகளில் மின்சாரம் கசிவதைக் தவிர்க்க தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும்.*
- *குளம்பு அழுகல் நோயை தவிர்க்கவும், ஓட்டுண்ணி நோயை தவிர்க்கவும் மழை பெய்யும் போது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது*
- *ஆட்டுக்குட்டிகளை நுரையீரல் அழற்சி நோயிலிருந்து பாதுகாக்க, கதகதப்பான கொட்டகை மற்றும் ஈரத்தன்மை இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.*
- *பன்றிக்குட்டிகளை குளிர் தாக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*
- *தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு முறையிலோ , கூட்டமாகவோ இனப்பெருக்கததிற்கு அனுமதிக்க வேண்டும்.*
- *கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களுக்கு இடைநிலை பருவங்களாக விளங்கும் உயிரிகள் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டகையை சுற்றியுள்ள மழைநீரை அகற்ற வேண்டும்.*

7. அதிக மழை பெறும் மண்டலம்

ஏதிர் வரும் ஐந்து நாட்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிக பட்சவெப்பநிலை 30-31^{0}செ. ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 22-23^{0}செ ஆகவும், வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர காற்றின் ஈரப்பதம் 60 - 80% பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08-14 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரைகள்

- *வாழை, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப்பட்டை மற்றும் தென்னை மரங்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.*
- *மழை இருக்கும் பட்சத்தில் வேர்விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.*

- *கோ-கோவில் தேவைக்கேற்ப பாத்திகளில் களை எடுத்தல், மண் அணைத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும்.*
- *காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.*
- *மர வாசனைப் பயிர்களில் பண்ணைக் கழிவுகளைக் கொண்டு நிலப் போர்வை அமைத்து மண்ணின் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.*

Sd/-

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.வே.ப.க., கோவை